# நாம் அனைவரும் உணர்ந்து கொள்ளக்கூடிய விஷயங்கள்

**இயற்கையின் உண்மையை நாம் மறந்து வருகிறோம்**

பஞ்ச பூதங்களான மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் இவை அனைத்துமே இயற்கை தன்மை வாய்ந்தவைகள். இயற்கை என்பது ஒன்று இல்லை என்றால் மனித குலம் என்பது ஒன்று இருக்காது. பஞ்ச பூதங்களின் தொடர்பு என்பது மனிதனுக்கு எந்தநேரமும் கூடவே ஒன்றி இருக்கும். இன்றைய - அன்றைய கோவில் வழிபாட்டு முறைகளும் இயற்கை சார்ந்து இருந்தது. பண்டைய கால கோவில்களும், பஞ்ச பூதங்களின் அ டிப்படையிலே அமைந்துள்ளது. பஞ்ச பூதங்களை தான் இன்று வரையிலும் பஞ்ச லிங்கமாக கோவில்களில் வழிபட்டு வருகிறோம். இயற்கையை ஒன்றியே மனிதன் வாழ்ந்தாக வேண்டும். இந்த இயற்கையான விஷயங்களை நாம் செயற்கையாக உருவாக்க முடியாது. இயற்கையை இவ்வுலகில் யார் உருவாக்கினார்கள், எங்கிருந்து நமக்கு கிடைக்கிறது என்பதை நாம் உணர வேண்டும்.

**மனித உடலைப்பற்றி**

கடவுளின் படைப்பான மனித உடல் என்பது அதிசயமானது, அற்புதமானது. ஒரு மனிதனுக்கு இரண்டு கண்கள், பார்க்கக் கூடிய தன்மை, இரண்டு மூக்கு என்பது சுவாசிப்பதற்கும், நுகர்வதற்கும் உடைய தன்மை, வாய் என்பது நம்மால் பேசுவதற்கும், சாப்பிடுவதற்கும் உடைய தன்மை.

இடுப்புக்குக் கீழ் உள்ள இரண்டு பகுதி என்பது நம்முடைய அன்றாட கழிவுகளை வெளியேற்றுவதற்கு உடைய தன்மை. நாக்கு என்பது இவ்வுலகில் உள்ள அனைத்து சுவைகளையும் உணரக் கூடியது. கைவிரலிலும், கால் விரலிலும் வளரும் நகம் என்பது வெட்ட வெட்ட அதனுடைய பொழிவை இழக்காமல் மீண்டும் மீண்டும் வளரக் கூடியது. இவை நமது உடலிற்கும், இந்த உலகிற்கும், பாதுகாக்கவும் பயன்படக் கூடிய ஒன்றாகும். நமது உடலில் ஆங்காங்கே (மயிர்) என்னும் முடியானது நமது உடலையும் உறுப்புகளையும் பாதுகாக்கக்கூடியது. முடியை வெட்ட வெட்ட வளரக் கூடியது. நாம் இவ்வுலகில் பிறக்கும்போது வளரக் கூடிய முடியானது. நாம் இந்த உலகை விட்டு பிரியும் வரை இநத உடலுடன் ஒன்றி அதன் பொழிவை இழக்காமல் பயன்பட்டு வருகிறது. நமது உடலின் கைகளும், கால்களும் இவற்றின் செயல்பாடுகள் என்பது மிக முக்கியமானதாகும். கை, கால்களுக்கும், மிக கடுமையான வேலை பளுவை நாம் கொடுக்கிறோம். அவ்வாறே நாம் வேலை பளுவை கொடுத்தாலும், அதனுடைய .

தன்மையை மாற்றிக் கொள்வது இல்லை. எந்திரம் போல் செயல்படக் கூடிய ஒன்றாகும். மேலும் நமது கைகளிலும், கால்களிலும் உட்புறம் இருக்கும் தோலானது மிக கடுமையான வேலைகள் கொடுத்தாலும் அதனுடைய பொழிவை இழக்காமல் மீண்டும், மீண்டும் வளரக்கூடிய ஒன்றாகும். நாம் செயற்கையாக உருவாக்கும் பொருட்களான ஆடை, அணிகலன்கள் போன்ற பொருட்களை அணிந்து வருகிறோம். ஆனால் அதற்குரிய முடிவு காலம் வரும்போது நாம் நமது உடலுக்கு உகந்தது அல்ல என்று அதையெல்லாம் அப்புறப்படுத்துகிறோம். இதைப் போல பல வகையான உலோகங்களும், இயந்திரங்களும் போன்றவற்றிற்கு அதிகப்படியான வேலைகளை நாம் அன்றாடம் கொடுத்து வந்தால் அதனுடைய உண்தை தன்மையும், அதனுயைட பொழிவுகளில் மாற்றம் ஏற்படும். ஆனால் கடவுள் படைத்த இந்த மனித உடம்பானது நாம் பிறக்கும்போது எப்படி வருகின்றோமோ, அதே போல் இறக்கும் வரையிலும் அதனுடைய பொழிவை இழக்காமல் நமக்கு இந்த உலக வாழ்க்கைக்கு பயன்பட்டு வருகிறது என்பதை நாம் உணர வேண்டும்.

மனித உடலும், மனித உறுப்புகளும் தன்னைத்தானே சரிசெய்து கொள்ளக்கூடிய தன்மை கொண்டதாகும். கடவுள் இவ்வுலகை படைக்கும்போது மனிதன் உயிர் வாழ்வதற்கும், மனிதனுக்கு தேவையான அனைத்து அடிப்படை விஷயங்களும் சேர்த்தே படைத்துள்ளார் என்பதை நாம் உணர வேண்டும்.

நாம் அனைவரும் சரியான உணவு முறைகள், ஆரோக்கியம் இல்லாத வாழ்க்கை முறைகளின்படி வாழ்ந்து வருகிறோம். நமது உடலை மிக விரைவாக அழித்து வருகிறோம். செயற்கையாக ஒரு மனிதனையும், மனித உயிரையும் உருவாக்க முடியாது. ஒரு மனிதனின் மரணத்தை தடுத்த நிறுத்த முடியாது. அவனை 100, 200, 300 ஆண்டுகள் என வாழவைக்க முடியாது என்பதை உணர்ந்து நமக்கு மேல் சக்தி என்பது ஒன்று உள்ளது என்பதை உணர வேண்டும். இந்த மனித பிறப்பின் நோக்கம் என்ன என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். மேலும் இதே போல் பல சூட்சமங்கள் அடங்கியுள்ளது மனித உடலாகும் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.